# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newslett

. ஓலை –1 | தை 2017 | தோரணம்12


## ~ பொங்கல் நல்வாழ்த்துக்கள் ~







**தைத்திங்கள் திருநாளில்**

**தானியங்கள் பொலிய**

**காலைக்கடன் முடித்து**

**கடவுளின் தாள் தொழுது**

**இயற்கையின் தலைவனை**

**இவ்வுலகத்து நாயகனை**

**கதிரொளி பரப்புவோனை**

**கரம் கூப்பி நாம் வணங்கி**

**அரிசி பயறு வெல்லம் சேர்த்த**

**அமுதினைச் செய்து நாமும்**

**பொங்கலோ பொங்கலென்று**

**பொங்கல்தனைப் படைத்து**

**வந்தனங்கள் பல கூறி**

**வாயார வாழ்த்துவமே!**

**~அருள்~**


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர் வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்




## தைப்பொங்கல் பெருவிழா

## 21-01-2017

**இலண்டன் வாழ் தமிழர்களே.**

**காலம் காலமாக சூரிய பகவானுக்கு நாம் எடுக்கும் பொங்கல் பெருவிழா. புலம்பெயர் நாட்டில் எமது இளைய சமுதாயத்திற்கு எமது கலை கலாச்சாரத்தை நினைவுகூரச் செய்யும் பெருவிழா. நீங்களும் குடும்பமாக வந்து இத் தமிழர் விழாவை கண்டு களிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி**



# ஸ்ரீ ஏகாதச ருத்ர பாராயண ஜபமும் ஹோமமும்

# 29-01-2017(காலை)

எமது ஆலயத்தில் ஏகாதச ருத்ர பாராயண ஜபமும் ஹோமமும் நடைபெற திரு-வருள் கைகூடியிருப்பதால் அன்று பகதர்கள் அனைவரையும் கலந்து கொண்டு இறையருள் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்.– சைவ முன்னேற்றச் சங்கம் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் சந்நிதி

**2, Salisbury Rd. Manor Park, London E12 6AB**

காலம் - 29-01-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00மணி.


காலை 6மணிக்கு ஸ்ரீ கணபதி ஹோமம் தொடர்ந்து நவக்கிரக ஹோமம்

காலை 9மணிமுதல் **ஸ்ரீ ஏகாதச ருத்ர பாராயண ஜபமும் ஹோமமும்**

**பகல் 12.30 மணிமுதல் பூர்ணகுதி, அபிசேகம். பூசை**

**பகல் 2.00மணிக்கு பிரசாதம் வழங்கல் தொடர்ந்து மதிய உணவு வழங்கல்**

## யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் - 2017



யோகர் சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் .எமது ஆலயத்தில் காலை 10-12மணிவரை பின் வரும் தினங்களில் நடைபெறும் என்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

14-01-2017 - சனி ஆயிலிய நட்சத்திர தினம் காலை 10-12 மணிவரை

05-02-2017 - ஞாயிறு காலை 10-12 மணிவரை

05-03-2017 - ஞாயிறு காலை 10-12 மணிவரை

. .

**நியாயமான வழியில் நடப்பவனுக்கு தேவையான சமயத்தில் உதவி கிடைக்கும்.**

**இதுதான் திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பதன் விளக்கம்**




## திருவாதவூரடிகள் திருப்புராணப் படலம்.

திருவாதவூரடிகள் திருப்புராணப் படலம் மார்கழித் திருவெம்பாவை தினங்களில் 10 நாட்களும் எமது சங்க ஆலயத்தில் விளக்கவுரைகளுடன் படிக்கப்பெற்றது. வைத்திய கலாநிதி திரு. பவகரன் அவர்களின் பங்குபற்றுதலுடன் இப்படிப்பு நடைபெற்றது. புராணப் படிப்பில் பங்குபற்றியயவர்களை கீழே காண்கிறீர்கள்.







## "கலசம்" தை-2017

கலசம்” தை மாதக்காலாண்டிதழ் பொங்கல் அன்று வெளிவர இருக்கின்றது. கடந்த 25 வருடங்களாக இந்த ஆன்மிக இதழ் இலவசமாக வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

இவ்விதழை இலண்டனிலுள்ள சைவமுன்னேற்றச் சங்கத்திலும். மற்றும் ஆலயங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விதழை தபாலில் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய சைவமுன்னேற்றச்சங்க தொலைபேசி இல. 0208 514 4732 சகல ”கலசம்"இதழ்களையும் **www.saivamunnettasangam com**என்ற இணையதளத்தில் காணலாம்.

**மார்கழித் திருவாதிரை நடேசர் அபிசேகம் 11-01-2017 அன்று அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.**







# ஓம் நமசிவாய சிவாயநம ஓம்

## பெரியபுராணத் தொடர் விரிவுரை

திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெருமைமிக்க சிவனடியார்களின் சிறப்பைச் சொல்லும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு மீண்டும் எங்கள் ஆலயத்தில் இடம்பெற சிவபெருமான் திருவருள் கிட்டியுள்ளது. சென்ற ஆண்டுகளில் ஐந்து முறை இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் பக்திமிக்கத் திருப்பணியில் சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும், கேட்டும் அருள் பெறுமாறு உங்களைப் பணிவாக அழைக்கின்றோம்

| | | |
|---|---|---|
| 6.01.2017<br>வெள்ளிக்கிழமை | சாக்கிய நாயனார்<br>ஆதியாரை நாளும் கல் எறிந்து அணுகப் பெற்ற கோதில் சீர்த் தொண்டர்ச் சிறப்பு | திருமதி. வசந்தராணி ரவீந்திரதாஸ் |
| 13.01.2017<br>வெள்ளிக்கிழமை | சிறப்புலி நாயனார்<br>அறத்தினில் மிக்கமேன்மை அந்தணர் ஆக்கூர் மறைப் பெரு<br>வள்ளலார் பெருமை | திரு. சூ. யோ.பற்றிமாகரன் |
| 20.01.2017<br>வெள்ளிக்கிழமை | சிறுத்தொணட்ர் நாயனார்<br>தனிப்புதல்வன் தன்னை அரிந்து அமுது ஊட்டப் பேறு பெற்றார் மேன்மை | திரு.சதாசிவம் ஆனந்ததியாகர் |
| 27.01.2017<br>வெள்ளிக்கிழமை | கழறிற்றறிவார் நயனார்<br>பிடிமேல் பார்முழுதும் ஏத்த நம்பியை முன் போற்றி பின்பு தாம் ஏறி சாமரை வீசிய பண | புலவர் கதிரித்தம்பி சிவாநந்தன் |
| 03.0122017<br>வெள்ளிக்கிழமை | கணநாத நாயனார்<br>திருப்பணி அணைத்தவர்க்கு வினை விளங்க வேணடிய குறை எலாம் முடித்த திறம் | கலாநிதி விஸ்வலிங்கம் அனந்தசயனம் |
| 10.02.2017<br>வெள்ளிக்கிழலை | கூற்றுவ நாயனார்<br>மலர்ப் பாதம் முடியாகப் பெற்று உலகம் எல்லாம் புரந்தார் புகழ் | திரு. த. இரவீந்திரமோகன் |

**எதிர்பார்ப்பு இல்லாமல் வெளிப்படுத்தும் அன்பே உயர்வானது. கைமாறு கருதும் அன்பு வியாபாரம் போன்றது.**

**அறிவுள்ளவன் ஆத்திரப்பட விரும்பமாட்டான். அசையாத அமைதியே அறிவின் வெளிப்பாடு**

# CHILDREN IN NEED...

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - Sri Lanka – Dec’16

**Solar Lanterns were donated to underprivileged children (12) in Visvamadu village at vanni, who do not have electricity in their homes.**














This program is to continuously provide help for children in need to facilitate their education.





















Sincere thanks go to our Yoga practicing Kids and their parents continued support in raising funds for this activity. Also thanks to KM Foundation for their inval- support on the

**We have distributed over 135 solar lamps to date in 2016 and our tar- with your sup- ..**

**Our special also to**

**Ms S Rajasingem (Cana- for her contribu-**


**email : smsukyoga @gmail.com or mobile: 07770 470527**

# திருவாரூர் தியாகராஜர் கோயில்


**இந்தியாவில் உள்ள மிகப் பெரிய கோயில் இதுவாகும். இங்கு மட்டும் 350 லிங்கங்கள் இருக்கின்றன. இது வருடத்திலுள்ள 365 நாட்களைக் குறிப்பதாகும். இங்கு சிவன் சுயம்புலிங்கமாக காட்சியளிக்கிறார்.இராஜகோபுரத்தின் உயரம் 120அடி. நான்கு புறமும் கோபுரங்கள். 86 விநாயகர் சிலைகள். திருவிழாக் காலங்களில் பந்தல் போடுவதற்காக அக்காலத்தில் கற்தூண்கள் நிறுத்தப்பட்டிருந்ததாக அறிகிறோம். இக் கோயில் 30 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோயிலுடன் சேர்ந்து அமைந்துள்ள கமலாலயக்குளம் 16 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இந்தியாவில் உள்ள பெரிய கோயிற் குளங்களில் இதுவுமொன்று. தமிழ் நாட்டில் உள்ள தேர்களில் திருவாரூர் கோயிலிலுள்ள இத்தேர்தான் மிகவும் உயரமும்,நிறை கூடியதாகும். இது98 அடி உயரமும் 300 தொன் எடைமுடைய தேராகும்.**











“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## Saiva Munnetta Sangam (UK)

***“Community Service Through Saiva (Hindu) Concern”***

Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732    Fax: 01268 561805

www.saivamunnettasangam.com    smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## எமது சேவைகள்

அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்
கலசம் காலாண்டிதழ்
தோரணம் மாதாந்த மின்னிதழ்
நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் மூத்தோர் நியைம்
யோகா நிலையம்

சைவ சமயப் பரீட்சைகள்
கலை வகுப்புகள்
நால்வர் கோட்டம்
இறுதிக் கிரியைகள்



## ஆலய சங்க நிகழ்வுகள்

## தை—மாசி மாதம் 2017

**14~01~2017 சனிக்கிழமை ~ தைப்பொங்கல்** Thai Pongal

27-01-2017 வெள்ளிக்கிழமை - தை அமாவாசை விரதம்
**Thai New Moon**

**29-01-2017** ஞாயிற்றுக்கிழமை - ஏகாதச ருத்ர பாராயணமும் ஹோமமும்
**Ehathasa Rudra Homam & worship**

**09-02-2017** வியாழக்கிழமை தைப்பூசம் **Thaippoosam**

**24-02-2017** வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி **Sivarathiri**

**11-03-2017** சனிக்கிழமை நடேசர் அபிசேகம் மாலை 600மணி

**Use your voice for kindness, your ears for compassion, your hand for charity, your mind for truth, your Heart for Love**

**உள்ளதைப் பேசி நல்லதையே செய்! நீ கடவுளைத் தேடவே தேவையில்லை ஏனென்றால் அவர் உன்னிடமே இருக்கிறார்**

சங்க ஆலயத்தில் நடைபெறும் பூசை நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட சில















**இறைவனைத் தேடி நீ எங்கும் அலையத் தேவையில்லை அவனை நீ தேட வேண்டிய இடம் உன் உள்ளேதான் இருக்கிறது**

SAMPOOR PROJECT –2

**From: Dr Velautham Sarveswaran <vsarveswaran@hotmail.com>**
**Sent: 11 December 2016 18:53**
**To: S Niranjan's**
**Cc: siva asokan**
**Subject: Re: Sampoor - Phase 2 Resettlement - Urgent Need for toilets**

**Dear Niranjan,**

**I have sent you by "wetransfer" some photos of 11 toilets of the 13 permanent toilets constructed using funds from Saiva Munnetra Sangam. I will email the photos of the missing two toilets soon. Those have been completed but they failed to send the photos.**

**I would like to thank your organisation for the kind support towards building toilets in Sampoor. I am sure you can see from the photos that many women have benefitted from your financial support.**

**Please share your thoughts of this project, if possible.**

**Best regards,**

**Sarves**



